Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான இலவச
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனிக்கிழமை, செப்டம்பர் 18, 2021 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 66

# பிரதமர் நரேந்திர மோடிக்கு 71வது பிறந்தநாள்! ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு, ராகுல் காந்தி, முதல்வர் ஸ்டாலின், எடப்பாடி பழனிசாமி உட்பட பல்வேறு தலைவர்கள் வாழ்த்து தெரிவித்தனர்

சென்னை, செப். 18 2021: நேற்று பிரதமர் நரேந்திர மோடிக்கு 71வது பிறந்தநாள். இதை முன்னிட்டு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு, காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தமிழக முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பிரதமர் நரேந்திரமோடி குஜராத் மாநிலத்தில் 1950ம் ஆண்டு செப்டம்பர் 17-ந்தேதி பிறந்தார். மோடி நேற்று தனது 71வது பிறந்தநாளை கொண்டாடினார்.

பிரதமர் மோடிக்கு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு, காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி, மத்திய அமைச்சர்கள் அமித்ஷா, கிரண் ரிஜிஜு, அசாம் முதல்வர் ஹிமந்தா பிஸ்வா சர்மா, உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத், புத்த மத தலைவர் தலாய் லாமா, தமிழக முன்னாள் முதல்வர் ஸ்டாலின், எடப்பாடி பழனிசாமி உட்பட பல்வேறு தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.



பிரதமர் நரேந்திர மோடிக்கு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பிறந்தநாள் பதிவில் கூறியிருப்பதாவது:-

''பிறந்த நாள் வாழ்த்துக்கள், உங்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள். நல்ல ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் பெற உங்களை நான் வாழ்த்துகிறேன், மேலும் ஆத்மார்த்தமான மனப்பான்மையுடன் தேசத்திற்கு தாங்கள் செய்து வரும் சேவை தொடர்ந்து செய்திட விரும்புகிறேன் "என்று கூறியுள்ளார்.

துணை ஜனாதிபதி வெங்கய்ய நாயுடு தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் ''பிரதமர் மோடியின் தனித்துவமான தொலைநோக்கு, முன்மாதிரியான தலைமை, அர்ப்பணிப்பு, சேவை தேசத்தின் சகல வளர்ச்சிக்கும் வழிவகுத்துள்ளன. அவருக்கு நீண்டநாள், ஆரோக்கியமான மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ வாழ்த்துகிறேன்'' என்று பதிவிட்டுள்ளார்.

காங்கிரஸ் எம்.பி., ராகுல்காந்தி ஒரே வரியில் வாழ்த்து கூறியுள்ளார். இது தொடர்பாக ராகுல்காந்தி டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், "இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள் மோடி ஜி" என தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள பிறந்தநாள் வாழ்த்துச் செய்தியில், பிரதமர் நரேந்திர மோடிக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள். அவர் நல்ல உடல்நலத்துடன் நீண்ட நாட்கள் வாழ வாழ்த்துகிறேன் என்று கூறியுள்ளார்.

மோடிக்கு, தமிழக முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி டுவிட்டரில் வெளியிட்டுள்ள பிறந்தநாள் வாழ்த்து செய்தியில் கூறி இருப்பதாவது:-

பிரதமர் நரேந்திர மோடிக்கு எனது அன்பான பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். தேசத்துக்கு சேவை செய்வதில் உங்கள் அர்ப்பணிப்பு உணர்வும், உறுதியும் பாராட்டுக்குரியவை.

தாங்கள் நீண்ட ஆயுளும் நல்ல உடல்நிலையுடனும் இந்த தேசத்துக்கு நீண்ட காலம் சேவையாற்ற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் அன்னதான திட்டம்!



**கன்னியாகுமரி, செப்டம்பர் 18 2021: இந்துசமய அறநிலை துறை சார்பில் திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவில் பக்தர்களுக்கான 3 வேளை அன்னதானம் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலிகாட்சி வாயிலாக தொடக்கி வைத்தார். இதற்கான முன் ஏற்பாடு பணிகளை இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் பி.கே சேகர்பாபு, மீன் வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அனிதா.ஆர். ராதாகிருஷ்ணன் முன்னிலையில் நேரில் சென்று செய்தார்கள், அருகில் இந்து சமய அறநிலைத்துறை ஆணையர் குமரகுருபரன், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் செந்தில் ராஜ், திருச்செந்தூர் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஹரிஷ்சிங், திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் செல்வநாயகம் மற்றும் அலுவலர்கள் இருந்தார்கள்.**

# விழுப்புரம் வடக்கு மாவட்ட ஊரக உள்ளாட்சி தேர்தல் தொடர்பான நேர்காணல் நிகழ்ச்சி அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் நடைபெற்றது

விழுப்புரம், செப்டம்பர் 18 2021: விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி தொகுதியில் உள்ள ஒன்றிய மாவட்ட கவுன்சிலர் பதவிக்கு போட்டியிடுகின்ற திமுக வேட்பாளர்களுக்கு நேர்காணல் கூட்டம் செஞ்சி வள்ளி அண்ணாமலை திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நல துறை அமைச்சரும் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளருமான செஞ்சி கே .எஸ். மஸ்தான் தலைமை தாங்கி திமுகவின் சார்பில் விருப்ப மனு அளித்த திமுக நிர்வாகிகளிடம் நேர்காணல் நடத்தினார்.

இதில் செஞ்சி மேல்மலையனூர் வல்லம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களை சேர்ந்த நிர்வாகிகள் பங்கேற்றனர். நேர்காணலில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கூறுகையில் ஒன்றிய கவுன்சிலர் பதவிக்கும் மாவட்ட கவுன்சிலர் பதவிகளுக்கும் போட்டியிடக்கூடிய கழகத்தினருக்கு மக்களுடைய செல்வாக்கும் கழகத்தினரின் முழு ஆதரவு உள்ளவர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படும் என அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்.



நேர்காணல் நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் செஞ்சி கிழக்கு விஜயகுமார் , மேல்மலையனூர் கிழக்கு நெடுஞ்செழியன் ,தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா பொதுக்குழு உறுப்பினர் செல்வராஜ், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் மாவட்ட தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர் மொக்தியார் மஸ்தான்உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



**கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சி தலைவர் டாக்டர். வி. ஜெயசந்திர பானுரெட்டி, தலைமையில் சமூகநீதி நாள் உறுதிமொழி அனைத்து துறை அலுவலர்களும் எடுத்துக் கொண்டனர். கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் வி. ஜெயசந்திரபானு ரெட்டி, தலைமையில் சமூக நீதி நாள் உறுதி மொழியினை அனைத்து துறை அலுவலகம் எடுத்துக்கொண்டனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ரெ. சதீஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் கோ. மலர்விழி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் முருகன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வளர்ச்சி ராஜகோபால் ,துணை இயக்குனர் சுகாதாரப்பணிகள் மாவட்ட வழங்கல் அலுவலர், கோபு, உட்பட அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.**



**மதுரை: மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், மதுரை நாடாளுமன்ற உறுப்பினர், சு.வெங்கடேசன் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அனீஸ் சேகர் மாநகராட்சி ஆணையாளர் கார்த்திகேயன் மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ. தளபதி மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன் திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினர் வி.வி.ராஜன்செல்லப்பா ஆகியோர் பொலிவுறு நகர திட்டம் தொடர்பாக அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டனர்.**

# தபால் ஆய்வாளர் பணிக்கு தேர்வு செய்யப்பட்ட 60 பேரில் 57 பேர் வெளிமாநிலத்தவர் தேர்ச்சிக்கான தேர்வில் தமிழ் பாடம் இணைக்கப்பட வேண்டும் அமைச்சருக்கு சு.வெங்கடேசன் எம்.பி கடிதம்

மதுரை, செப்டம்பர் 18 2021: ஒன்றிய அரசின் தகவல் தொடர்பு அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்களுக்கு சு.வெங்கடேசன் எம்.பி எழுதியுள்ள கடிதத்தின் விபரம் .

தபால் துறையில் மக்கள் தொடர்பு நிலையில் உள்ள அலுவலர்கள் நியமனங்களுக்கு நடைபெறும் தேர்வுகளில் மாநில மொழி தேர்ச்சிக்கு எந்த ஏற்பாடும் இல்லை.

அஞ்சல் உதவியாளர், அஞ்சல் பிரிப்பு உதவியாளர், ஆய்வாளர்கள் ஆகிய பணிகளை செய்யும் ஊழியர்களுக்கான தேர்வுகளை அலுவலர் நியமன ஆணையம் நடத்தும் போது தமிழில் அவர்கள் உரையாடக் கூடியவர்களா என்று கூட சோதித்துப் பார்ப்பதில்லை. இவர்களிடம் சேவை நாடி வரும் பொதுமக்கள் திண்டாடுகிறார்கள். அந்த பணியாளர்களும் தங்கள் பணியை திறம்பட ஆற்ற முடிவதில்லை. ஆய்வாளர்கள் கிராமப்புற அஞ்சல் அலுவலகங்களின் செயல்பாடுகளை கண்காணிப்பவர்கள். கடந்த 10 ஆண்டுகளில் ஆய்வாளர் பணிக்கு நடைபெற்றுள்ள நேரடி நியமனங்களில் தேர்வு செய்யப்பட்ட 60 பேரில் 57 பேர் வெளி மாநிலங்களை சேர்ந்தவர்கள் என்று அறிய வருகிறேன்.

தபால் அலுவலகங்களின் கதவைத் தட்டுபவர்களில் பெரும்பான்மையோர் கிராமங்களில் இருந்து வருபவர்கள். பொருளாதாரத்தில் அடித்தட்டு மக்கள். இத்தகைய கோடிக்கணக்கான மக்களை இணைக்கிற தபால் ஊழியர்கள் தமிழ் அறிந்திருக்க வேண்டாமா?

எனவே தபால் ஊழியர் நியமன முறையில் தமிழ்த் தேர்ச்சிக்கான தேர்வு இணைக்கப்பட வேண்டும். பள்ளி இறுதி தேர்வு/ மேல்நிலை கல்வித் தேர்வில் தமிழ் பாடமாக இருந்து அவர்கள் தேர்ச்சி பெற்றிருந்தால் இந்த தேர்வில் விதி விலக்கு அளிக்கலாம்.



இக்கோரிக்கையை பரிசீலித்து நல்ல முடிவை எடுக்க வேண்டும். இது அஞ்சல் சேவையை மேம்படுத்தும். அதை நாடி வரும் மக்களுக்கும் பெரும் பயன் தரும். ஒன்றிய அரசு இக்கோரிக்கைக்கு செவிமடுக்குமென்று நம்புகிறேன்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

சனிக்கிழமை,
செப்டம்பர் 18, 2021

# ஸ்கூட்டர் மீது லாரி மோதியதில் தாய் - மகள் பலி : தூத்துக்குடியில் பரிதாபம்

தூத்துக்குடி, செப்டம்பர் 18 2021: தூத்துக்குடியில் ஸ்கூட்டர் மீது லாரி மோதியதில் பெண்ணும் அவரது 11 வயது மகளும் பரிதாபமாக உயிரிழந்தனர்.

தூத்துக்குடி தாளமுத்துநகர், தாய் நகரைச் சேர்ந்தவர் காளிதாஸ் மனைவி உமையர்கனி 32, இந்த தம்பதிகளின் மகள் எஸ்தர் (11). அன்று மாலை உமையர்கனி மகள் எஸ்தருடன் தெர்மல் நகர் கேம்ப் 1ல் உள்ள தனது தாயார் வீட்டிற்கு ஸ்கூட்டரில் சென்று கொண்டிருந்தார். தூத்துக்குடி - திருச்செந்தூர் ரோட்டில் ஸ்கூட்டரில் சென்று கொண்டிருந்தனர். தூத்துக்குடி துறைமுகம் - மதுரை பைபாஸ் ரோட்டில் ரவுண்டானா அருகே செல்லும் போது துறைமுகத்தில் இருந்து மதுரை நோக்கி சென்ற சரக்கு லாரி அவர்களது ஸ்கூட்டரில் மோதியது. இதில், தாயும் - மகளும் லாரியின் பின்பக்க டயரில் சிக்கினர். இவ்விபத்தில் சிறுமி எஸ்தர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். படுகாயம் அடைந்த உமையர் கனி, தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலே உயிரிழந்தார். இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்ததும் தெர்மல் நகர் இன்ஸ்பெக்டர் ராதிகா மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று சிறுமி எஸ்தரின் சடலத்தைக் கைப்பற்றி பரிசோதனைக்காக அரசு மருத்துமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இது தொடர்பாக வழக்குப் பதிந்து, லாரி டிரைவரை பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர். இவ்விபத்தால் துறைமுகம் - மதுரை பைபாஸ் ரோட்டில் சுமார் அரை மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. சம்பவ இடத்தை தூத்துக்குடி எஸ்பி ஜெயக்குமார், டவுன் டிஎஸ்பி கணேஷ் ஆகியோர் பார்வையிட்டு விசாரணை நடத்தினர். டிரைவரின் போதையால் விபத்து..?



லாரி டிரைவர்கள் கஞ்சா, மது போன்ற போதைப் பொருட்களை பயன்படுத்தி வருவதால் நிதானமின்றி அதிவேகமாக வாகனத்தை ஓட்டுவதால் விபத்துக்கள் ஏற்படுவதாக கூறப்படுகிறது.

இதனை தடுக்க தூத்துக்குடி துறைமுகம் முதல் டோல் கேட் வரை காவல் துறையினர் அடிக்கடி சோதனை செய்தால் இது போன்ற விபத்துகள் தவிர்க்கலாம். மேலும், கனரக வாகனங்களில் பெரும்பாலும் கிளீனர்கள் இல்லாமலே லாரிகள், டாரஸ் லாரிகள் போன்றவை இயங்கி வருகின்றன. இதனை கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டிய வட்டார போக்குவரத்து அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பது இல்லை.

இதன் காரணமாகத்தான் இது போன்ற உயிர்ச்சேதங்கள் ஏற்படுகின்றன என்பது சமூக ஆர்வலரின் குற்றச்சாட்டாக உள்ளது.

# தந்தை பெரியாரின் 143வது பிறந்தநாள் விழா: அனைத்து கட்சி சார்பில் அவரது திருவுருவச் சிலைக்கு மாலைகள் அணிவித்து மரியாதை:

காஞ்சீபுரம், செப்.17 2021: தந்தை பெரியாரின் 143வது பிறந்தநாளையொட்டி, அனைத்து கட்சி சார்பில் அவரது திருவுருவச் சிலைக்கு மாலைகள் அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தந்தை பெரியாரின் 143 வது பிறந்த நாளையொட்டி பெரிய காஞ்சீபுரம் கங்கைகொண்டான் மண்டபம் அருகில் உள்ள பெரியார் சிலைக்கு அதிமுக சார்பில் காஞ்சீபுரம் மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான வி.சோமசுந்தரம், கழக அமைப்புச் செயலாளர்கள் வாலாஜாபாத் பா.கணேசன், மைதிலி திருநாவுக்கரசு, அனைத்துலக எம்ஜிஆர் மன்ற நிர்வாகி காஞ்சி பன்னீர்செல்வம், மாவட்ட எம்ஜிஆர் மன்ற செயலாளர் பூக்கடை ஆர்.டி.

சேகர், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் கே.யு.எஸ். சோமசுந்தரம், மாவட்ட கழக பொருளாளர் வீ.வள்ளிநாயகம், நகர கூட்டுறவு வங்கி தலைவர் வி.பாலாஜி, ஒன்றிய கழகச் செயலாளர்கள் தும்பவனம் டி.ஜீவானந்தம், களக்காட்டூர் ராஜி, காஞ்சிபுரம் நகர செயலாளர் என்.பி.ஸ்டாலின், மாவட்ட இலக்கிய அணி நிர்வாகி கவிஞர் எஸ்.முருகவேள், முன்னாள் நகரமன்ற உறுப்பினர் இ.கண்ணபிரான், அதிமுக நிர்வாகியும், தொழிலதிபருமான கோல்ட் ரவி, பட்டு கூட்டுறவு சங்க தலைவர்கள் ஜி.விஸ்வநாதன், யுவராஜ் என்கிற துரை, கே.வாசு, ராதாகிருஷ்ணன் உள்பட பலர் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

திமுக:- திமுக சார்பில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ, காஞ்சீபுரம் எம்எல்ஏ சிவிஎம்பி எழிலரசன், காஞ்சீபுரம் எம்.எல்.ஏ. ஜி.செல்வம், திமுக நிர்வாகிகள் சிபிஎம்அ.சேகரன், வக்கீல் துரைமுருகன், நெசவாளர் அணி நிர்வாகி தி.அன்பழகன்

உள்பட பலர் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். ஆர்.வி.ரஞ்சித்குமார்:- முன்னாள் ஒன்றிய கவுன்சிலரும், ஆன்மீக பிரமுகருமான முத்தியால்பேட்டை ஆர்.வி. ரஞ்சித்குமார், முத்தியால்பேட்டையில் பெரியார் படத்திற்கு மாலை அணிவித்து வணங்கினார்.பிறகு அவர் காஞ்சீபுரம் கங்கைகொண்டான் மண்டபம் அருகே பெரியார் சிலைக்கு மலர் மாலை அணிவித்து வணங்கி பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார்.



மதிமுக சார்பில் மாவட்ட செயலாளர் இ.வளையாபதி, மாவட்ட திக செயலாளர் டி.ஏ.ஜி அசோகன், மற்றும் நிர்வாகிகள் பெரியாரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தந்தை பெரியாரின் 143 வது பிறந்த நாளையொட்டி பெரிய காஞ்சீபுரம் கங்கைகொண்டான் மண்டபம் அருகில் உள்ள பெரியார் சிலைக்கு அதிமுக சார்பில் காஞ்சீபுரம் மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான வி.சோமசுந்தரம், கழக அமைப்புச் செயலாளர்கள் வாலாஜாபாத் பா.கணேசன், மற்றும் அண்ணாதிமுக நிர்வாகிகள் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினர்.

**கோவை: கோவை சுண்டப்பாளையம் ரோடு திமுக 21-வது வட்ட கழகத்தின் சார்பில் தந்தை பெரியாரின் 143 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு பெரியார் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தகப்பட்டது. நிகழ்ச்சியில் பாப்பநாயக்கன் புதூர் பகுதி திமுக பொறுப்புக் குழு உறுப்பினர் சி.எம்.முத்தழகன், வட்ட திமுக செயலாளர் சி.எஸ்.கருணாநிதி, மாநகர் மேற்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் கராத்தே வீரமணி, வட்டக் திமுக பிரதிநிதி தளபதி ரமேஷ், வட்டக் திமுக துணைச் செயலாளர் முஹமது நாசர், இளைஞரணி எஸ். பாலன், எல்பி எஃப் தொழிற்சங்க நிர்வாகிகள் கனகராஜ் ,செல்வராஜ், ராமு, மாணவரணி சிஎஸ்கே. இனியவன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.**



**கிருஷ்ணகிரி: தமிழ்நாடு முதலமைச்சர் வேண்டு கோளுக்கிணங்க கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஓசூர் டாட்டா ஸ்டீல் பிஎஸ்எல் தனியார் நிறுவனம் சார்பாக கொரோனா நிவாரண நிதியாக ரூபாய் ஒரு லட்சத்திற்கான காசோலையை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் வி. ஜெயச்சந்திர பானுரெட்டி நிறுவன நிர்வாக பொறுப்பாளர் கணேசன், வழங்கினார். உடன் நிறுவன மேலாளர் (மின்சாரம்) சுபோத் பரான்ச்பே இருந்தனர்.**



# சென்னை எம்ஜிஎம் ஹெல்த்கேரில் வங்கதேசத்தை சேர்ந்த நோயாளி ஒருவருக்கு இந்தியாவின் முதல் சிடி வழிகாட்டுதல் மினிமலி இன்வேசிவ் நரம்பியல் அறுவைசிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டது !

சென்னை, செப்டம்பர் 18 2021: சென்னையின் இதயப் பகுதியில் அமைந்துள்ள அனைத்து அதி நவீன வசதிகளும் கொண்ட மருத்துவமனையான எம்ஜிஎம் ஹெல்த்கேர் , நாட்டிலேயே முதன் முறையாக வங்கதேசத்தைச் சேர்ந்த 28 வயதான நோயாளி ஒருவருக்கு நரம்பு மண்டலத்தில் சி.டி வழிகாட்டுதலுடன் கூடிய மினிமல் இன்வேசிவ் எனப்படும் உடலில் பெரிய காயம் ஏற்படுத்தாமல் மிகச் சிறிய அளவில் துளையிட்டு செய்யப்படும் சிகிச்சை முறையை வெற்றிகரமாக செய்துள்ளதாக நேற்று அறிவித்துள்ளது . வங்கதேசத்தைச் சேர்ந்த சேர்ந்த 28 வயதான இளம் தாய் , திருமதி ஷூலி கோல்டர் கடந்த 9 ஆண்டுகளாக கழுத்து மற்றும் தலையின் இடதுபுறத்தில் கடுமையான வலியால் அவதிப்பட்டு வந்தார் . தொடர்ச்சியான வலி அவருக்கு கடுமையான வேதனையை ஏற்படுத்தியது . மேலும் அவருடைய வயது குழந்தையைக் கவனித்துக்கொள்வது உட்பட அன்றாட நடவடிக்கைகளுக்கும் இடையூறாக இருந்தது . இது குறித்து டாக்டர் கே.ஸ்ரீதர் அவர்கள் விவரிக்கையில் , " தீர்க்க முடியாத வலியிலிருந்து விடுபட நோயாளி மிகவும் ஆர்வமாக இருந்தார் . இது தொடர்பாக அவர் தன்னுடைய நாட்டில் உள்ள மருத்துவர்கள் மற்றும் இந்தியாவில் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் உள்ள நிபுணர்களைத் தேடிச் சென்றார் . பல ஸ்கேன் எடுத்து , பல நிபுணர்களின் ஆலோசனை பெற்று , பல முன்னணி மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றும் எதுவும் அவருக்கு பலன் அளிக்கவில்லை , கடைசியில் அவர் நோய் கண்டறிதல் மதிப்பீடு மற்றும் சிகிச்சைக்காக எங்கள் மருத்துவமனைக்குப் பரிந்துரைக்கப்பட்டார் . அவருக்கு உயர் தெளிவான காட்சிகளை ( ஹை ரெசல்யூஷன் ) வெளிப்படுத்தும் எம் ஆர் நியூரோகிராபி உடன் கூடிய 3 டி எம்ஆர்ஐ ஸ்கேன் எடுத்துப் பார்த்தோம் . அதில் இடது கழுத்து சி 2 பகுதியிலிருந்து வலி வெளிப்படுவதைக் கண்டறிந்தோம் . ஸ்கேன் பரிசோதனை மூலம் பிரச்னை எந்த இடத்திலிருந்து வெளிப்படுகிறது என்பதை தெளிவாகக் கண்டறிந்த பிறகு அதை சரி செய்வதற்கான சிகிச்சை 8 முறையைப் பற்றித் திட்டமிட்டோம் . அவருக்கு வலியை ஏற்படுத்தும் நரம்பு இழையை அழிப்பது ஒன்றே தீர்வு என்ற முடிவுக்கு வந்தோம் . ஆனால் இது மிகவும் சிக்கலான சிகிச்சையாகும் . நோயாளி ஏற்கனவே பல மருத்துவமனைகளில் பல்வேறு சிகிச்சையைப் பெற்றுள்ளார் . மேலும் நம்முடைய உடலில் கழுத்து பகுதியின் அமைப்பு மிகவும் சிக்கலானது . மிகவும் முக்கிய ரத்த நாளங்கள் , நரம்பு இழைகள் அறுவைசிகிச்சை வேண்டிய இடத்துக்கு மிக அருகில் செல்கின்றன . எனவே , ஆபத்தான இடத்தில் அறுவைசிகிச்சை செய்வதன் மூலம் நோயாளிக்கு உடல் பகுதிகள் செயலிழப்பு அல்லது உயிரிழப்பு ஏற்படாமல் இருக்க மிகவும் எச்சரிக்கையுடன் சிகிச்சையை திட்டமிட்டோம் . எம்ஜிஎம் ஹெல்த்கேரில் இந்த பிரச்னையை எதிர்கொள்ள அதிநவீன தொழில் நுட்பம் மற்றும் அதைப் பயன்படுத்த சிறந்த அனுபவமிக்க நிபுணர்கள் இருந்ததால் , அறுவைசிகிச்சை செய்வதற்கு பதில் அந்த நோயாளிக்கு மிகச் சிறிய துளை மூலம் சிகிச்சை செயல்முறையை மேற்கொள்ளத் திட்டமிட்டோம் . மிகச் சிறந்த அனுபவம் கொண்ட இன்டரவென்ஷனல் ரேடியாலஜி நிபுணர் குழு உதவியோடு சிடி வழிகாட்டுதலுடன் கூடிய



ரேடியோ ஃப்ரீக்குவன்ஸி அபலேஷன் சிகிச்சை திட்டமிடப்பட்டது " என்றார் . இது குறித்து மூத்த இன்டரவென்ஷனல் ரேடியாலஜி நிபுணர்கள் பேராசிரியர் டாக்டர் நவீன் ஞானசேகரன் மற்றும் டாக்டர் அருண் குமார் ஆகியோர் கூறுகையில் , " இந்த சிகிச்சைக்காக சிடி அறையை தற்காலிக நோய்த் தொற்று வாய்ப்பு துளியும் இல்லாத அறுவைசிகிச்சை கூடமாக மாற்றினோம் . நேரடி உயர் தெளிவுத்திறன் கொண்ட சிடி மற்றும் லேசர் மார்க்கர் வழிகாட்டுதல்களைப் பயன்படுத்தி இரண்டு கட்டங்களாக சிகிச்சை செயல்முறை தொடங்கப்பட்டது . மிகவும் சிக்கலான கேங்கலியன் பகுதியில் சிகிச்சை செய்ய வேண்டிய மிகத் துல்லியமான பகுதியைக் கண்டறிந்து ஸ்டீராய்டு மற்றும் குறிப்பிட்ட பகுதி மட்டும் மறத்துப் போகும் மயக்கவியல் / உணர்வு நீக்கவியல் மருந்து செலுத்தப்பட்டது . இதற்கு பிளாக் அல்லது தடுத்து நிறுத்துதல் என்று பெயர் . இப்படிச் செய்ததன் மூலம் வலி இல்லை என்று நோயாளி உறுதி செய்த பிறகு , இரண்டாம் கட்ட செயல்முறை தொடங்கியது . அவருக்கு பொது மயக்க மருந்து வழங்கிய பிறகு , அதிநவீன குளிரூட்டப்பட்ட ரேடியோ ஃப்ரீக்குவன்ஸி ப்ரோப் , கேங்லியனுக்கு அருகே நிறுவப்பட்டது . அதன் பிறகு வெப்பத்தை ஏற்படுத்தும் அபலேஷன் சிகிச்சை தொடங்கியது . இந்த சிகிச்சை 2.50 நிமிடங்கள் நடந்தது . இந்த 2.51 நிமிடங்களும் சிகிச்சை செயல்முறை மேற்கொள்ளப்பட்ட கேங்லியன் துல்லியமான பகுதியின் வெப்பநிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டது.

நியூரோ அனஸ்தடிக் மற்றும் நியூரோ கிரிட்டிகிள் கேர் தலைவர் டாக்டர் பொன்னையா மயக்க மருந்து பெற்ற நோயாளியின் சௌகரியம் மற்றும் நிலையைத் தொடர்ந்து கண்காணித்து வந்தார் " என்றனர் . இது குறித்து எம்ஜிஎம் ஹெல்த்கேர் தலைமை செயலாக்க அதிகாரி ஹரிஷ் மணியன் கூறுகையில் , " இந்த முதல் சிடி வழிகாட்டப்பட்ட நரம்பியல் அறுவை சிகிச்சை முறையின் பலனைக் கண்டு நாங்கள் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறோம் . இந்த சிகிச்சை மூலம் நோயாளி இனி ஆரோக்கியமான மற்றும் இயல்பான வாழ்க்கையை வாழ முடியும் என்று நம்புகிறோம் . எந்த ஒரு பிரச்னையாக இருந்தாலும் முழுமையான தீர்வு கிடைக்கும் ஒரே இடமாக எம்ஜிஎம் ஹெல்த்கேரை மாற்ற உதவும் வகையிலான இந்த சிகிச்சையை வெற்றிகரமாக நிகழ்த்திய எங்கள் மருத்துவ நிபுணர் குழுவின் முயற்சிகளையும் நான் பாராட்டுகிறேன் " என்றார்.

# மதுரையில் நரசிங்கம் கிராமத்தில் வசந்த விநாயகர் கும்பாபிஷேகம் வெகு விமர்சியாக வேத மந்திரங்கள் முழங்க நடைபெற்றது

மதுரை, செப்டம்பர் 18 2021: மதுரை மாவட்டம் நரசிங்கம் கிராமத்தில் வசந்த நகரில் வசந்த நகர் குடியிருப்போர் நலச் சங்கம் சார்பாக புதிதாக கட்டப்பட்ட வசந்த விநாயகர் சுவாமிக்கு அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. கோவில் மகா அஷ்டபந்தன கும்பாபிஷேகம் சீரும் சிறப்புமாக விமர்சியாக நடைபெற்றது. இதில் தலைவர் வழக்கறிஞர் பிரபாகரன் செயலாளர் செல்வம் பொருளாளர் கார்த்திக் துணைத் தலைவர் ரவி துணைச் செயலாளர் திருமலைராஜா துணை பொருளாளர் சரவணக்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மேலும் 'இந்நிகழ்வில் 500க்கும் மேற்பட்ட பக்தர்கள் திரளாக கலந்துகொண்டு பக்தி பரவசத்துடன் தரிசனம் செய்தனர்தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. மேலும் இந்நிகழ்ச்சியில் நரசிங்கம் ஊராட்சி மன்ற தலைவர் ஆனந்த் அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்.





# மதுக்கரை மத்திய ஒன்றிய சார்பில் சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி

கோவை, செப்டம்பர் 18 2021: கோவை மதுக்கரை மத்திய ஒன்றிய சார்பில் மதுக்கரை மார்க்கெட் பகுதியில் உள்ள அரசு சமுதாய நலக் கூடத்தில் சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. திமுக கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மருதமலை சேனாதிபதி ஆலோசனைப்படி மதுக்கரை மத்திய திமுக ஒன்றியப் பொறுப்பாளர் இ.பி.ஆர் (எ) அ.ராஜேந்திரன் தலைமை தாங்கினார்.

மதுக்கரை திமுக பேரூர் கழக செயலாளர் ராம்ஜி, மாவட்டப் பொறுப்புக்குழு உறுப்பினர் கேபிள் பாலு மற்றும் வார்டு செயலாளர் குருஜி மயில்சாமி ஆகியோர் முன்னிலையில் மதுக்கரை வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் ரூபா சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

இவ்விழாவில் வார்டு செயலாளர் சரவணன், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் கமலம், மாவட்ட சார்பு அணியினர் பில்டர் ராஜேந்திரன், மகேந்திரன், தர்மராஜ்,சாவித்திரி, ராணி, ஒன்றிய ஐடி விங் ஒருங்கிணைப்பாளர் கோவை பாலா மற்றும் இளைஞரணி ராஜா, சிவா மற்றும் மதன் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# பதவிகளை ஏலம் விட்டால் நடவடிக்கை மாநில தேர்தல் ஆணையம் எச்சரிக்கை

சென்னை, செப்.18 2021: ஊரக உள்ளாட்சித் தேர்தல் பதவிகளை ஏலம் விட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் எச்சரித்துள்ளது.

இது சம்பந்தமாக ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், ராணிபேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய 9 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரணத் தேர்தல் அறிவிக்கைகளையும், ஏனைய 28 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் காலியாக உள்ள பதவியிடங்களுக்கான தற்செயல் தேர்தல் அறிவிக்கைகளையும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் வெளியிட்டதைத் தொடர்ந்து, மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர், கிராம ஊராட்சி தலைவர் மற்றும் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் ஆகிய பதவியிடங்களுக்கு |5.9.2021 முதல் வேட்புமனுக்கள் பெறப்பட்டு வருகின்றன. இந்நிலையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான பதவியிடங்கள் ஏலம் விடப்படுவதாக நாளிதழில் செய்தி வெளியாகியுள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் மாவட்ட தேர்தல் அலுவலர், மாவட்ட கலெக்டர்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில், அரசியல் அமைப்பு சட்டத்திற்கும். மக்களாட்சி தத்துவத்திற்கும் புறம்பாக நடைபெறும் இத்தகைய செயல்கள் மிகவும் கண்டிக்கத்தக்கது மட்டுமின்றி, தண்டனைக்குரியது என்றும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய பதவியிடங்கள் இவ்வாறு ஏலம் விடுவது மக்களின் உணர்வுகளுக்கு ஊறுவிளைவிக்கும் செயல் என்பதால் ஜனநாயகத்திற்கு ஊறுவிளைவிப்பதை தடுத்திட மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட நிருவாகம் சட்டபூர்வ நடவடிக்கைகள் எடுப்பதுடன் இத்தகைய நிகழ்வுகள் ஜனநாயகத்திற்கு எதிரானவை என்பதனை மக்கள் உணரச் செய்ய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் இதுபோன்ற நிகழ்வுகள் நிகழாவண்ணம் தக்க முன்னேற்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆணையிட்டுள்ளது.

மேலும், ஊரக உள்ளாட்சித் தேர்தல்கள் மூலம் தேர்ந்தெருக்கப்படும் பிரதிநிதிகள் எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி கிராமப்புற மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்காக ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதால் தேர்தல் அறிவிக்கப்பட்ட பதவியிடங்கள் அனைத்தும் தேர்தல் மூலம் நிரப்பிட மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்''.

இவ்வாறு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அந்த அறிக்கையில் கூறியுள்ளது.

# கூட்டேரிப்பட்டு நான்கு முனை சந்திப்பில் புதியதாக ஐஸ்வர்யா சூப்பர் ருசி பால் ஏஜென்சிஸ் திறப்பு



**கூட்டேரிப்பட்டு: திண்டிவனம் அடுத்த கூட்டேரிப்பட்டு நான்கு மணி சந்திப்பில் ஐஸ்வர்யா சூப்பர் ருசி பால் ஏஜென்சி திறப்பு விழா நடந்தது.**

**கூட்டேரிப்பட்டு நான்கு முனை சந்திப்பில் சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் புதியதாக துவக்கப்பட்ட ஐஸ்வர்யா சூப்பர் ருசி பால் ஏஜென்சியை விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் மொக்தியார் அலி முதல் விற்பனையை துவக்கி வைத்தார். திறப்புவிழா நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆர்.சேதுநாதன், மாவட்ட பிரதிநிதி ஜெயபால், ஆசிரியர் கண்ணன், வழக்கறிஞர்கள் என்.ரமணன், அசோகன், கே.சி.ஆதித்தன், கௌதம், கே.எஸ்.அன்சாரி, சின்னதுரை, மாறன், சின்னா ராஜேந்திரன், சு.வெ.வெங்கடேஷ், ஆனந்த், வினோத் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.**



**கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே உள்ள கொத்தூர் கிராம பகுதியை சேர்ந்தவர், எல்லப்பன் ,வயது 45 இந்த பகுதியில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் தோட்ட பராமரிப்பாளர் ஆக வேலை செய்து வருகிறார். இந்த சூழ்நிலையில் அடிக்கடி மது அருந்தும் பழக்கம் இவருக்கு இருந்து வந்துள்ளது. இதனால் மனைவியுடன் அடிக்கடி வீட்டில் குடும்பத் தகராறில் ஈடுபட்டு வந்ததாக கூறப்படுகிறது சம்பவத்தன்று ஏற்பட்ட பிரச்சினையில் மனமுடைந்த ,எல்லப்பன் ,வீட்டில் யாரும் இல்லாத நிலையில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து ஓசூர் அட்கோ போலீசார் உடலை பிரேத பரிசோதனைக்காக ஓசூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து பின்னர் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.**

# வேர்ல்டு விஷன் சார்பாக பள்ளி மாணவர்களுக்கு இலவச பேக் வழங்கப்பட்டது



கன்னியாகுமரி, செப்டம்பர் 18 2021: கன்னியாகுமரி மாவட்டம் ஒற்றையால் விலை பகுதியை சேர்ந்தவர் அழகேசன் இவர் ஒரு தொழிலதிபர் ஆவார் இவருக்கு சொந்தமாக 3 மினி பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன மற்றும் ஷேர் ஆட்டோக்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

இரக்க குணம் உள்ளவர் அழகேசன் என்பவர் ஏழை எளிய மக்களுக்கு உதவுவதில் இறக்க குணம் கொண்டவர் தனது சொந்த பணத்தில் மற்றவர்களுக்கு உதவுவதே அவரின் நோக்கமாக உள்ளது இவர் இப்பொழுது திமுகவில் இணைந்துள்ளார்.

இணைத்துக் கொண்ட அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் அழகேசன் மரியாதை நிமிர்த்தமாக மாவட்ட தி மு க செயலாளரும் முன்னாள் அமைச்சருமான என்_சுரேஷ்ராஜன் அவர்களையும் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஒன்றிய கழகச் செயலாளருமான என்_தாமரைபாரதி அவர்களையும் நேரடியாக சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்து பெற்றார். இந்நிகழ்வின் போது பொதுக்குழு உறுப்பினர் திரு ஷேக் தாவூத், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் சுதன்மணி, மற்றும் கழக நிர்வாகிகள் . மணிராஜா, அன்பழகன், ஹரிகிருஷ்ண பெருமாள் உட் பட பலர் உடன் இருந்தனர்.

# கடமலை மயிலை ஒன்றியத்தில் தந்தை பெரியாரின் 143வது பிறந்தநாள் விழா கொண்டாட்டம்



**வருஷநாடு, செப்டம்பர் 18 2021: கடமலை மயிலை ஒன்றியம் மயிலாடும்பாறை ஊராட்சியில் தந்தை பெரியாரின் 143 ஆவது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது இவ்விழாவில் கம்பம் என் ராமகிருஷ்ணன் கம்பம் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் திமுக மாவட்ட செயலாளர் ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் தெற்கு ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் சுப்பிரமணி வடக்கு ஒன்றிய செயலாளர் தங்கப்பாண்டி ஒன்றிய கவுன்சிலர் ஆயுத வள்ளி மணிமாறன் மச்சக்காளை மற்றும் திமுக கிளை கழக நிர்வாகிகள் ஒன்றிய கழக நிர்வாகிகள் கழக பிரதிநிதிகள் அனைவரும் கலந்துகொண்டு உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.**

# அகஸ்தீஸ்வரம் ஊராட்சிய ஒன்றிய பெருந்தலைவர் திமுகவில் இணைந்துள்ளார்





கன்னியாகுமரி, செப்டம்பர் 18 2021: கன்னியாகுமரி மாவட்டம் ஒற்றையால் விலை பகுதியை சேர்ந்தவர் அழகேசன் இவர் ஒரு தொழிலதிபர் ஆவார் இவருக்கு சொந்தமாக 3 மினி பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன மற்றும் ஷேர் ஆட்டோக்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

இரக்க குணம் உள்ளவர் அழகேசன் என்பவர் ஏழை எளிய மக்களுக்கு உதவுவதில் இறக்க குணம் கொண்டவர் தனது சொந்த பணத்தில் மற்றவர்களுக்கு உதவுவதே அவரின் நோக்கமாக உள்ளது இவர் இப்பொழுது திமுகவில் இணைந்துள்ளார்.

இணைத்துக் கொண்ட அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் அழகேசன் மரியாதை நிமிர்த்தமாக மாவட்ட தி மு க செயலாளரும் முன்னாள் அமைச்சருமான என்_சுரேஷ்ராஜன் அவர்களையும் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஒன்றிய கழகச் செயலாளருமான என்_தாமரைபாரதி அவர்களையும் நேரடியாக சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்து பெற்றார். இந்நிகழ்வின் போது பொதுக்குழு உறுப்பினர் திரு ஷேக் தாவூத், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் சுதன்மணி, மற்றும் கழக நிர்வாகிகள் . மணிராஜா, அன்பழகன், ஹரிகிருஷ்ண பெருமாள் உட் பட பலர் உடன் இருந்தனர்.

# காஞ்சீபுரம் உலகளந்த பெருமாள் கோவில் உண்டியல் காணிக்கை: ரொக்கப்பணம் ரூ.9,05,727 வசூல்

காஞ்சீபுரம், செப்.18 2021: 108 திவ்ய தேசங்களில் பிரசித்திபெற்ற நான்கு திவ்ய தேசங்களும் ஒன்றாக இருக்கும் சிறப்பு வாய்ந்த காஞ்சீபுரம் உலகளந்த பெருமாள் கோவிலில் உள்ள 5 உண்டியல்கள் 11 மாதங்களுக்கு பிறகு திறந்து எண்ணப்பட்டது.

இதில் கோவில் செயல் அலுவலர்கள் மா.வெள்ளைச்சாமி, வி.மலைவாசன், பரம்பரை அறங்காவலர் ஆர்.அழகியசிங்கர் கோவில் ஆய்வாளர் பிரித்திகா, மேலாளர் ரகு ஆகியோர் முன்னிலையில் பொதுமக்கள் உதவியுடன் 5 உண்டியல்கள் திறந்து எண்ணப்பட்டது.

இதில் பக்தர்கள் காணிக்கையாக செலுத்திய ரொக்கப்பணம் ரூ.9 லட்சத்து 5 ஆயிரத்து 727, தங்கம் 36 கிராம், வெள்ளி 78 கிராம் கிடைத்துள்ளது.

# சிவகங்கை பாஜக நிர்வாகி சரமாரியாக வெட்டிக் கொலை“



சிவகங்கை செப் 18 2021: சிவகங்கையில் பாஜக மாவட்ட மீனவர் அணி துணைத் தலைவர் மர்ம நபர்களால் வெட்டி கொலை செய்யப்பட்டார்.

சிவகங்கை, காளவாசல் பகுதியைச் சேர்ந்த முத்துப்பண்டி(48) பாஜக மாவட்ட மீனவர் அணி துணைத் தலைவர்தலைவர். யார் நேற்று மாலை டூவீலரில் சென்று கொண்டிருந்தார். அப்பொழுது மற்றொரு டூவீலரில் 3 நபர்கள் அவரை விரட்டி வந்தனர். நெல் மண்டித் தெருவில் அவரை சுற்றி வளைத்த மர்ம நபர்கள்நபர்கள். சரமாரியாக அரிவாளால் வெட்டினர்வெட்டினர். கழுத்தில் பலத்த காயமடைந்த முத்துப்பாண்டி ரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே சரிந்தார். பின்னர் டூவீலரில் ஏறி தப்பிச் சென்றனர். பின்னர் அங்கிருந்தவர்கள் முத்து பாண்டியை மீட்டு சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர். ஆனால் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். முத்துப்பாண்டி மீது 3 கொலை வழக்குகள் உட்பட பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளன. எனவே முன் விரோதம் காரணமாக வெட்டி இருக்கலாம். என்ற கோணத்தில் சிவகங்கை நகர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# வருஷநாட்டில் கஞ்சா விற்ற ஒருவர் கைது 2 கிலோ கஞ்சா பறிமுதல்






**வருஷநாடு செப்டம்பர் 18 2021: கடமலை மயிலை ஒன்றியத்திற்குட்பட்ட வருசநாடு பழைய போலீஸ் ஸ்டேஷன் எதிர் தெருவில் குடியிருக்கும் பெருமாள் மகன் தென்னரசு வயது 45 என்பவர் அவரது இருசக்கர வாகனத்தில் கஞ்சா விற்பதாக வருஷநாடு காவல் நிலையத்திற்கு வந்த ரகசிய தகவலின் அடிப்படையில் சார்பு ஆய்வாளர் அருண்பாண்டி மற்றும் காவலர்கள் அசோக்குமார் சக்கன் ஆகியோர் ரோந்து பணியில் ஈடுபட்டனர். ரோந்து பணியின்போது மேற்படி நபரை சோதனை செய்தபோது அவரிடம் இரண்டு கிலோ கஞ்சா இருந்தது தெரியவந்தது. உடனே அவரிடம் இருந்த கஞ்சாவை பறிமுதல் செய்து வருஷநாடு காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து சிறையில் அடைத்தனர். உடன் தனிப்பிரிவு காவலர் ரஞ்சித் ராஜசேகர் சார்பு ஆய்வாளர் கருப்பையா உடனிருந்தனர்.**

# கடமலை மயிலை ஒன்றியத்தில் நரேந்திர மோடியின் 71வது பிறந்த நாள் விழா கொண்டாட்டம்



வருஷநாடு, செப்டம்பர் 18 2021: கடமலை மயிலை ஒன்றியத்தில் கண்டமனூர் அண்ணாநகர் மயிலாடும்பாறை தர்மராஜபுரம் வைகை நகர் வருசநாடு ஆகிய ஊர்களில் செப்டம்பர் 17 ல் பிறந்தநாள் காணும் பாரதத் தாயின் தவப்புதல்வர் பாரத பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்தி அனைத்து ஊர்களிலும் போஸ்டர்கள் ஒட்டப்பட்டு கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கினார். இந்த பிறந்தநாள் விழாவில் மாயகிருஷ்ணன் மாவட்ட விவசாய அணி பொதுச் செயலாளர் ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் ஊராட்சி கூட்டமைப்பு தலைவர் மணிகண்டன் தெற்கு ஒன்றிய தலைவர் கருப்பசாமி வடக்கு ஒன்றிய தலைவர் ஜெயபாண்டி தெற்கு ஒன்றிய பொதுச் செயலாளர் கேப்டன் தெற்கு இளைஞரணி ஒன்றிய தலைவர் முருகன் இளைஞர் அணி ஒன்றிய பொதுச் செயலாளர் இணைத் தலைவர் லோகேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு பாரத் மாதா கி ஜே என கோஷமிட்டு வருகை தந்திருந்த அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி பிறந்தநாள் விழாவை கொண்டாடி மகிழ்ந்தனர்.






# HELLO Mirror MADRAS

hellomadrasdaily@gmail.com
R.DIS No: 60/2021
Daily Morning Newspaper
The Truth








VOLUME - 1 | CHENNAI | DAILY | 4 Pages | Saturday, September 18, 2021 | Rs.2/- | ISSUE - 66


# Tamilnad Mercantile Bank Inaugurates e-Lobby at Tirumala

Tirumala, September 18 2021: One of India's oldest leading private sector banks, Tamilnad Mercantile Bank (TMB), launched an e-Lobby at Tirumala, where the World famous Sri Venkateswara Swamy Temple is located.

The manned e-Lobby near to the Tirumala Balaji Bus Stand was inaugurated by A.V. Dharma Reddy, IDES, Additional Executive Officer Tirumala Tirupati Devasthanam (TTD), in the presence of K.V. Rama Moorthy, MD & Chief Executive Officer, TMB, T.V. Sivakumar Reddy, Additional Chief Vigilance and Security Officer, TTD, P. Harindranath, Deputy Executive Officer (Annadhanam Trust) TTD, M. Ramesh Babu, Deputy Executive Officer (Temple) TTD, L. Lokanadham, Deputy Executive Officer(R-1) TTD, and other dignitaries and customers of the Bank. TMB's Directors and executives had also attended the function.

TMB has always added value to all the stakeholders for the last 99+ years. The launch of this e-Lobby yet again proves the bank's commitment to provide an enhanced banking experience to the customers. The 24X7 e-Lobby houses ATM Machine, Cash Deposit Machine, Passbook Printing Facility, Cheque Deposit Kiosk and an Information Kiosk, all under one roof. With this TMB has a total of 51 e-Lobby across India. TMB's Tirupathi branch also handed over sanction letters to a few loan beneficiaries. The Bank also handed over subscription to Sri Venkateswara Bhakthi Channel, run by TTD, during the function.




Speaking about the launch, Shri K.V. Rama Moorthy, MD & Chief Executive Officer, TMB said, "Today, we dedicate this e-Lobby to the pilgrims who visit the holy shrine of Balaji from various parts of the country and also to the local people. In the era of Banking technology reaching greater heights, TMB is thinking of ways to provide ease of doing banking transactions by its customers through digitization and e-Lobby is one such initiatives in line with the same.

# Southern Railway launches fortnight long Special Cleanliness campaign

## Thematic drives focusing on cleanliness to be held all over the zone

New Delhi,, September 18 2021: Southern Railway has been channelizing its efforts to achieve sustainable improvement in the cleanliness arena . This year, a fortnight long special cleanliness drive,'Swachhata Pakhwada' has been launched today, 16th September 2021. John Thomas, General Manager, Southern Railway inaugurated the special cleanliness drive by administering Swachhata Pledge virtually to the Officers and staff of Headquarters.

Environment & Housekeeping Management (EnHM) wing of Southern Railway Headquarters functioning under the aegis of S.Srinivas, Principal Chief Mechanical Engineer organised a rally to promulgate the message of '"No to Single Use Plastic" among employees and rail users. Bharat Scouts and Guides also participated in the rally and also held mime show to create awareness.



Southern Railway and its divisions will organise various theme based cleanliness drives and campaigns during the Cleanliness fortnight with the help of NGOs, Scouts & Guides and volunteers. Employees will contribute to the drive by cleaning their workspace and participating in various awareness programmes. Intensive cleanliness drives focusing on 'fill the dustbin', anti-littering,plastic waste management, etc. will be held apart from regular inspections by Officers and Supervisors in trains and railway stations.

All the divisions and workshops of Southern Railway also launched Special Cleanliness drive today and Swachhta pledge was administered to Railway employees Divisional Offices and other establishments.

Southern Railway appeals to rail users to join hands with Railways in maintaining higher standards of cleanliness in trains, railway stations and tracks.

# Mahindra Finance announces entry into Vehicle Leasing and Subscription business under 'Quiklyz' brand

Chennai, September 18 2021: Mahindra & Mahindra Financial Services Limited (MMFSL/Mahindra Finance), part of the Mahindra Group, today announced its entry into the Leasing and Subscription business. The new vertical would operate under the brand name 'Quiklyz', denoting the changing mindset on mobility.

With the process of owing a vehicle at an inflection point, consumers today want to access vehicles earlier in their life and upgrade their vehicles faster than ever before. Leasing and Subscription model offered by 'Quiklyz' provides exactly that; where consumer pays a monthly fee to access the vehicle of their choice across all car brands, at a lower price point vs. regular car ownership. Corporate and businesses are also looking for alternate ways to have access to vehicles which can match their requirements without the burden of traditional ownership models.

The name 'Quiklyz' denotes an aspirational mindset of ensuring hassle free vehicle usership to its consumers. The objective for 'Quiklyz' is to build a nimble model with very high asset quality. This also gives the brand a springboard to launch similar products in semi-urban and rural markets in times to come.

Speaking on the new business initiative, Ramesh Iyer, Vice-Chairman & Managing Director, Mahindra Finance said, "With 'Quiklyz', we aim to make the process of ownership convenient for our consumers both for individual and corporate segments alike. I am confident 'Quiklyz' will add substantial value to our existing financial business portfolio as we aspire to tap all emerging opportunities in this space".




Turra Mohammed, SVP & Head, Leasing & Subscription, Mahindra Finance mentioned, "A very important set of consumers for our new business will be the millennials who aspire to not only owning a vehicle, but to do so in a hassle-free manner. 'Quiklyz' will provide that convenience while allowing them to frequently change or upgrade to newer models entering the market without any down payment. For corporates as well, leasing is fast emerging as a viable option both for providing cars to their employees and obtaining vehicles for their business use".

Mahindra Finance and Mahindra Group ecosystems would give an edge to 'Quiklyz' with the business utilizing all common infrastructure of Mahindra Finance.

Changing millennial mind-set, asset light business models, car scrappage policy, rapid vehicle launches by automotive OEMs, emergence of EVs and sharply reducing average holding period of new car etc., are expected to accelerate Leasing and Subscription as owners look at alternate ways of vehicle access without treating it as a long-term commitment.

# MGM Healthcare Chennai successfully performs India's first CT guided Minimally Invasive Neuro Surgical Procedure on a patient from Bangladesh

Chennai, September 18, 2021: MGM Healthcare, a multi-specialty quaternary care hospital in the heart of the Chennai, today announced that it had successfully performed a CT guided Minimally Invasive Neuro Surgical Procedure on a 28-year-old patient from Bangladesh- for the very first time in the country. The surgery was successfully performed on 7th September 2021. A multi-disciplinary team lead by Prof. Dr. K Sridhar Director, Neurosciences and Spine at MGM healthcare successfully conducted this complex minimally invasive pain-relieving procedure on the patient.

A young mother Mrs. Sheuli Goldar aged 28 from Bangladesh was suffering from severe left sided pain of the nape of neck and head for the past 9 years. The constant pain caused her intense agony, and hampered her daily activities including taking care of her 8-year old child.

Speaking about the case, Dr. K Sridhar explained "The patient was anxious to get relieved from the unfathomable pain and they sought medical expertise from various hospitals both in their country and in India. She underwent multiple scans, consultations and different treatments were tried in some of the top hospitals - but none could offer her any relief. She was then referred to our hospital for further assessment and treatment."

He further added," We conducted a high resolution



3T MRI scan with MR neurography and diagnosed that the pain was emanating from the left Cervical C2 Dorsal root ganglion, high up in the neck. Once we had a clarity from the scans about the underlying issue, the only possible treatment option was to perform a procedure which would destroy the pain fibers of the ganglion - which is a neural junction in general terms. But this was quite difficult as the patient had already been subjected to multiple procedures at other hospitals and also, the anatomy of the region was extremely complex with important blood vessels and the spinal cord in close proximity."

"We had to be extremely cautious while planning the procedure in order to avoid a major risk of paralysis or death due to the precarious location of the ganglion. With the technological advancements and the expertise available at MGM Healthcare, we decided to perform a minimally invasive intervention over an open surgery. A CT guided Radiofrequency Ablation procedure was planned with the help of our highly experienced Interventional Radiology Team."

Prof. Dr. Navin Gnanasekaran and Dr. Arunkumar, Senior Interventional Radiologists said "We converted the CT suite into a temporary sterile operation theatre. The two-part interventional procedure was commenced using live high-resolution CT images and laser marker guidance. In the first part, the ganglion was accurately targeted and a mixture of steroid + long acting local anesthetic injected. This is called a 'Block'; and once the patient confirmed the disappearance of the pain after the block, the second part of the surgery was performed. After administering general anesthesia, a state-of-the-art cooled Tip Radiofrequency Probe was positioned in the near vicinity of the ganglion and the ablation surgery which is thermal burning, was commenced. Accurate temperature of the target ganglion was monitored throughout the actual procedure which lasted a mere 2.5 minutes. Dr. Ponnaiah, Chief of Neuro Anesthesia and Neuro Critical Care ensured that the patient was comfortable under anesthesia and monitored the patient through the intervention".

The Radiologists added "We have performed a number of radiofrequency procedures on other organs of the body, but an RF ablation surgery for C2 dorsal root ganglion under CT guidance had never been attempted before in India. It was a big challenge, and we're glad we were able to perform it with zero complications. CT guidance for minimally invasive neurosurgical procedures is definitely more accurate and precise, with significantly reduced risks."

Harish Manian, CEO, MGM Healthcare said, "We are truly happy with the outcome of this first CT guided neuro surgical procedure and hope that the patient is able to lead a healthy and normal life. I also commend the efforts of our team of experts as it helps us in becoming one-stop cost effective destination for any health concerns."

The hospital is happy to report that the patient has underwent the surgery successfully and has been ridden of the pain completely for life.

Speaking on her experience the patient said "I would like to thank the clinical team led by Dr. K Sridhar at MGM Healthcare for giving me a fresh lease of life. I would like to thank the nursing team for their tireless service during these testing times."

# EuroKids International & Goodknight join hands to drive learning for awareness and prevention of mosquito-borne diseases

Mumbai, September 18, 2021: EuroKids International, India's leading early childhood education company, and Goodknight, India's leading kid-safe mosquito control brand from Godrej Consumer Products Ltd (GCPL), announced a strategic partnership to nurture awareness and prevention strategies of mosquito-borne diseases right from an early age. The aim is to ensure that children are protected from deadly diseases like malaria, dengue, chikungunya, among others.

COVID-19 is a major ongoing health risk for everyone including children. There are instances of overlap in symptoms of COVID-19 and mosquito-borne diseases, posing double threat to kids. The Health Management Information System (HMIS), a data dashboard of India's National Health Mission (NHM), reported over 3.37 lakh cases of malaria and 1.30 lac dengue cases between April 2020 to March 2021. Mosquito-borne diseases spike up during the monsoon season from June to October. As of today, the health risk is greater with kids venturing outdoors as the lockdown is lifted in most parts of India. When our healthcare system is already stretched due to the pandemic, we cannot be unprepared for mosquito-borne diseases. Acknowledging these concerns, EuroKids and Goodknight will drive activities to build lifelong awareness of mosquito-borne diseases and their prevention tactics.

Speaking about the collaboration, KVS Seshasai, CEO, Pre-K Division, EuroKids International, said, "The learning and development milestones are crucial in the early years of development. And for holistic development mind, body and soul need to be aligned and functioning well. Young children are very much prone to diseases like malaria, dengue. These diseases can be taken care of if proper hygienic facilities are adhered to. The Goodknight brand from GCPL is one of the leading household names in India and this partnership will help our message of continuous and uninterrupted learning spread amongst the masses. We look forward to reaching all the people and make sure that people are aware of the hygienic practices to follow".

Commenting on the partnership, Sunil Kataria, CEO India & SAARC, Godrej Consumer Products Ltd, said, "Goodknight is dedicated to protecting happy moments of the family and ensure they are uninterrupted from the deadly mosquitoes. The ongoing pandemic and diseases like malaria and dengue pose double threat to families including children. As India's market leader in the household insecticide category, our intent is to empower them against mosquito-borne diseases. EuroKids has redefined early child care education in India. Our long-term partnership with EuroKids is critical as early childhood is the best phase to educate children. These are the early foundation years for kids learning to lifelong learnings and habit creation."

EuroKids and Goodknight will utilize multiple platforms and tools to engage stakeholders. There will be simple yet powerful informative assets featuring India's leading parenting gurus and pediatricians. These assets will be shared with parents through social media, web portals and the EuroKids HomeBuddy App. Virtual discussions featuring vector-control experts will be organized for preschool students and their parents. EuroKids has also become the official preschool partner for Goodknight Patches, a pediatrician certified solution to be safe outdoors from mosquitoes. Regular newsletters and email-campaign will be undertaken capturing details of mosquito-control prevention tactics. Parents and children will also get to experience some unique products and solutions by Goodknight.

# WTO Agreement on Agriculture tilted against developing countries: Piyush Goyal

New Delhi,, September 18 2021: The G-33 Virtual Informal Ministerial Meeting organized by Indonesia was held yesterday, to discuss the Agricultural Priority Issues of G33 and the Way Forward for the Twelfth Ministerial Conference (MC-12) scheduled to be held from 30th November to 3rd December 2021.

The Informal Ministerial Meeting was chaired by the Minister of Trade of the Republic of Indonesia, Muhammad Lutfi. Director General of WTO, Dr Ngozi Okonjo Iweala delivered the Keynote Remarks. Out of a total of 47 G-33 Members, representatives from 21 Member countries, including India, took the floor to make brief intervention.

India's official delegation for the meeting was headed by Piyush Goyal, the Minister of Commerce & Industry, Consumer Affairs & Food & Public Distribution and Textiles. In his intervention the Minister emphasized that as part of the trust-building exercise for MC 12, G-33 must strive for positive outcomes on permanent solution to Public Stockholding (PSH) for food security purposes which is of utmost importance, finalization of a Special Safeguard Mechanism (SSM) quickly and a balanced outcome on Domestic Support. He highlighted that Agreement on Agriculture at the WTO was riddled with deep imbalances, which favour the developed countries and have tilted the rules against many developing countries and therefore as a first step in agriculture reform, the historical asymmetries and imbalances must be corrected in order to ensure a rule-based, fair and equitable order. He urged the G 33 members to work collectively to retain the cohesion of G 33 coalition and strengthen it further by reaching out to other like-minded developing groups to secure their support for a fair, balanced and development - centric outcome on agriculture at MC-12.


Owned & Pubilshed by R.SATHYANARAYANAN from No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 26, and printed by him at chennai offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-2, Editor: R.SATHYANARAYANAN, Email: hellomadrasdaily@gmail.com. Contact: 8148231942. Subject to Chennai Court Jurisdiction